விதிகளில் மாறுதல்களை மேற்கொள்ளலாமே ஒழிய ஒரேயடியாக படுகை விதிகளை மாற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதியிலே 200 மீட்டருக்குள் அந்தப் பாசன வசதிக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுவது இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 200 மீட்டருக்கு அப்பால் உள்ள நீர் பகுதிகளுக்கும் இந்த மின் இணைப்பு கொடுக்கப்படுவது இல்லை. அதற்கு பாலாறு விதி இருக்கிறது என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அது தவிர வட ஆற்காடு மாவட்டத்தில் 10 குதிரை சக்திக்கு அதிகமான மோட்டார்களை யாரும் அமைப்பது இல்லை. எனவே, இவைகளை எல்லாம் கருதி, விவசாயிகளின் நலன் கருதியும், தமிழ் நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்கிற வகையிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசிலனை செய்து இதை அறவே நீக்க முன் வருவார்களா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 200 மீட்டர் தூரத்தில் அந்தக் கிணறுகளை ஆழப்படுத்தவோ, புதிய கிணறுகளை தோண்டவோ கூடாது. 200 மீட்டருக்குள் என்பதை வலியுறுத்தித் தான் புதிய விதிகள், புதிய அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அரசு ஆணையை இப்பொழுது தான் 3-5-1986-இல் போட்டோம். இன்று தேதி 14-5-1986 என்று கருதுகிறேன். அந்த வகையில் இன்னும் விவரங்கள் சரியாக அந்தப் பகுதிக்கு போய் சேர்ந்து இருக்காது என்று கருதுகிறேன். எனவே, அந்த 3-5-1986 ஆணைகளின்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அந்த ஆணை கடைப்பிடிக்கப் பட்டாலே அந்தப் பகுதி மக்களுக்கு பயன் உள்ளதாக அமையும். மேலும் எந்த எந்த பகுதிகள் எல்லாம் இந்த வரையறைக்குள் வருகிறது என்பதை தனியாக ஒரு பட்டியல் தயாரித்து அது எல்லோருக்கும் தெரியக்கூடிய அளவிலே விளம்பரப்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தை இந்த அரசு வலியுறுத்தியிருக்கிறது.

3. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.